# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதிவிசேஷமானது**

අංක 1711/15 - 2011 ජූනි 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.06.23

***1711/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது குறிப்பு இல. சுவீ/கேடி 108/டபிள்யு எம்ஏ.*

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :*

*மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், ஹேவாகம கோரளையில் பல்லேபத்துவ சிறு பிரிவில், 488 கோரத்தொட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொழும்பு மாவட்டத்தின் நில அளவை அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட பூர்வாங்க வரைபட இல. கொ.9138 இன் துண்டு இல. 01 ஐ கொண்ட 2.0238 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமான காணித் துண்டுகளின் விபரங்கள் :*

***பூர்வாங்க வரைபட இல. கோ 9138 இன் துண்டு இல. 01***

***01. துண்டு இல. 01***

*காணியின் பெயர் : மயிக்வத்த அல்லது கோரதொட்ட கந்த; விபரம் : திறந்த வெளிநிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமைகோருபவர் : தெரியாது ; விஸ்தீரணம் : 2.0238 ஹெக்டயார்ஸ்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு கடுவெல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*எம். எஸ். பீ. சூரியப்பெரும,*
*பிரதேச செயலாளர்,*
*கடுவெல.*

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*கடுவெல,*
*2011.06.08.*

*07- 195*